கிருபையுள்ள வார்த்தை

# கிறிஸ்தவ வாழ்வு தரும் பலன்

## Benefits of Christian Life

Philemon Rajah



தமிழ், ஆங்கில தபால்வழி பைபிள் பாடங்கள், பத்திரிக்கைகள் பெற
கிருபையுள்ள வார்த்தை
தபால் பெட்டி – 15, அரசரடி, மதுரை – 625 016.
போன் : 92 4421 4421, 92 4431 4431 Email : obey2jesus@gmail.com

## கிறிஸ்தவ வாழ்வு தரும் பலன்

பிரியமானவர்களே!!

கிறிஸ்தவ வாழ்க்கை பரிசுகள் நிறைந்த வாழ்வாகும். அது பலன் நிறைந்ததாயிருக்கிறது. இந்த வாழ்க்கை தேவனிடத்திலிருந்து நாம் பெற்றுக் கொண்டதாயிருக்கிறது. இந்த பரிசுகளும், பலன்களும் என்ன என்பதை தெரிந்து கொள்ளலாம். ஒரு சிறந்த வாழ்க்கை இந்த உலகில் வாழ வேண்டுமென்றாலும், பின் இருக்கும் வாழ்வையும் நாம் அனுபவிக்க வேண்டுமென்றாலும் நாம் கிறிஸ்தவர்களாக வாழ வேண்டியது சாலச் சிறந்ததாகும். 1பேதுரு 3:10,11–ன் படி சமாதானம், ஜீவன், நல்ல காரியங்கள் நிறைந்த வாழ்வு தான் கிறிஸ்தவ வாழ்வாகும் என்று வாசிக்கிறோம். நாம் நினைக்கலாம், 'நான் பார்க்கும் அநேகரிடம் இவை இல்லையே' என்று; ஒருவேளை அவர்கள் பயிற்சி செய்யாமலிருக்கலாம். ஆனால் வேதம் சொல்லுகின்ற கிறிஸ்தவ வாழ்வு, பலன் நிறைந்த, ஆசீர்வாதங்கள் அடங்கிய ஒரு வாழ்வாக இருக்கிறது. **யோவான் 11:25,26**–ன்படி, எல்லாருக்கும் ஏற்படும் மரணம் கிறிஸ்தவனுக்கும் உண்டு. உலகில் பிறந்த அனைவருக்கும் தவறாமல் நிச்சமாய் நடப்பது மரணம். ஆனால், கிறிஸ்தனாக கிறிஸ்துவுக்குள் வாழ்கிறவர்களின் ஆசீர்வாதத்தின் பலனுக்கும், முடிவுக்கும் ஒரு மாபெரும் வித்தியாசம் இருக்கிறது.

### I. சமாதானம் நிறைந்த வாழ்வு

இந்த பலன் எப்படிப்பட்டதென்று நாம் தெரிந்து கொள்ள வேண்டியது மிக அவசியமான ஒன்றாகும். கிறிஸ்துவுக்குள் இருக்கும் வாழ்வு நிச்சயமாகவே மகிழ்ச்சியை தரக்கூடியதாக இருக்கிறது. யாராயிருந்தாலும் மரணம் என்பது எல்லோருக்கும் ஒன்றுதான். ஆனால், ஒரு கிறிஸ்தவனுக்கு இந்த வாழ்வையும், இந்த முடிவைப் பற்றிய சிந்தனையின் செயலில், எதிர்பார்ப்பில் அவனுக்குள் ஒரு வித்தியாசம் இருக்கும். யோவான் 14:27–லே கிறிஸ்துவை விட்டு பிரியப்போகிற அவருடைய அப்போஸ்தலர்களுக்கு அவர் சொன்னது: 'நான் உங்களுக்கு



சமாதானத்தை வைத்துப் போகிறேன்' என்பதாகும். 'உலகம் தருகின்றதைப் போன்றதல்ல என் சமாதானம். அது வித்தியாசமானது' என்கிறார் இயேசு. ஒரு கிறிஸ்தவன் சமாதானமாக அந்த வாழ்வை மகிழ்ச்சியுடனே அனுபவிக்க முடியும். புரிந்துகொள்ள முடியாத, அறிவுக்கெட்டாத, சமாதானம் நிறைந்த ஒரு வாழ்வு கிறஸ்தவ வாழ்வு. அவர்கள் வெளிப்புறத்திலே, உடல் ரீதியாக, இந்த உலக ரீதியாக சமுதாயத்தில் மிகவும் புறம் தள்ளிய நிலையில், குறைந்த நிலையில், வசதியற்ற நிலையில், வாழ்வின் அடிப்படை நிலையைக் கூட அனுபவிக்காதவர்களாய் இருக்கலாம்; ஆனால், அவர்களுக்குள்ளே கிறிஸ்து தருகின்ற மகிழ்ச்சி நிறைந்த சமாதானம் உண்டு. அதுதான் கிறிஸ்தவ வாழ்வு தரும் பரிசாக, பலனாக இருக்கிறது.

### II. மகிழ்ச்சி நிறைந்த வாழ்வு

இந்த வாழ்வு தரும் அடுத்த பலன் மகிழ்ச்சியாகும். தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்பி, அதினாலே அவன் மகிழ்ச்சியடையக் கூடியவனாக இருப்பான். ஒருவேளை பரீட்சையில் தோல்வியோ, வியாபாரத்தில் முடக்கம், நஷ்டம் அடைந்திருக்கலாம். எதிர்பார்த்த பணவரவு இல்லாமல் போயிருக்கலாம். எல்லா பிரயாசம் எடுத்தும், இவர்களை வைத்து மற்றவர் முன்னேறி இக்கட்டான சூழ்நிலையில் இருக்கலாம். ஆனாலும், ஓர் உண்மைக் கிறிஸ்தவனாலே மகிழ்ச்சியாயிருக்க முடியும். தேவனுடைய வாக்குத்தத்தங்களின் மீது அவன் நம்பிக்கை வைத்ததினாலே அவர்களுக்குள்ளே உண்மையான மகிழ்ச்சியிருக்கும். **எபிரெயர் 2:14, 15**–ல், மரண பயத்திலிருந்து இவர்களுக்கு ஒரு விடுதலை. மனிதர்களாகிய நாம் மாம்சத்தையும், இரத்தத்தையும் உடையவர்களாயிருக்கிறதினாலே, தேவன் தன்னுடைய குமாரனையும் அதைப்போலவே அனுப்பி, பாடுகளும், நம்முடைய வேதனைகளை தாங்கிக் கொள்ளவும், அவைகளிலிருந்து தப்பிக் கொள்ளவும், அவைகளை மேற்கொள்ள பெலன் பெறும்படியாக செய்தார்.



### III. வாக்குத்தங்கள் நிறைந்த வாழ்வு

தேவனுடைய வாக்குத்தத்தங்கள் நிறைந்த ஒரு வாழ்க்கை தான் கிறிஸ்தவ வாழ்க்கையாகும். 'கஷ்டங்களெல்லாம் நீங்கிப் போகும். அவர்களைப் போல் இவர்களும் முன்னேறி விடுவார்கள்' என்பதெல்லாம் இல்லை. உலகம் அனுபவிக்கிற பிரகாரமான மகிழ்ச்சி இவர்களுடையதல்ல. உலகம் கொடுக்க கூடியதான சமாதானம் இவர்களுடையதல்ல. இவர்களுடைய திட்டங்களும், மகிழ்ச்சியும், சமாதானமும் தேவனுடைய வாக்குத்தத்தங்களையே சார்ந்தவையாகும். கிறிஸ்தவர்களுக்கு, அதாவது கிறிஸ்துவின் வசனத்தின்படி நடப்பவர்களுக்கு மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்ததத்தங்கள் உண்டு என 2 பேதுரு 1:4 கூறுகிறது.

உள்ளே போராட்டம், பயம், ஏக்கம், வெறுமை, வெறுப்பு, குழப்பம் நிறைந்திருக்கும். ஆனால், மீட்கப்பட்ட கிறிஸ்தவனுக்குள்ளேயோ வெளித்தோற்றத்தில் மற்றவர்களைப் போல உயர்ந்த நிலை இல்லாவிட்டாலும், உள் நிலையிலே தேவனுடைய வாக்குத்தத்தங்களினாலே வருகிற மகிழ்ச்சி நிறைந்த, சமாதானமுள்ள வாழ்க்கையாயிருக்கும். இது தான் கிறிஸ்தவ வாழ்க்கையினுடைய பரிசுகளாயிருக்கின்றது என்பதை வேதம் நமக்கு தெளிவுப்படுத்துகின்றது.

### IV. நம்பிக்கை நிறைந்த வாழ்க்கை

**யோவான் 5:28,29**–லே, எல்லாருக்கும் மரணம் என்பது நிச்சயிக்கப்பட்ட ஒன்றாகுமல்லவா! எல்லாரும் அதை சந்தித்தே ஆக வேண்டும். இந்த பூமியில் சிறப்பாக வாழ்ந்து, இந்த பூமியிலே உயர்ந்த நிலையிலே இருக்கிறவர்கள், கடவுளை நம்பி, பரிசுத்தமாய், விட்டுக் கொடுத்து வாழ்கின்றவர்களை, 'ஏமாளியைப் போல், இழந்தவனைப் போல், அற்பமாய் வாழ்கின்றானே!, இவன் என்ன நன்மை



அடைந்துள்ளான்' என்று கேட்டுக் கொண்டிருக்கிறவர்களுக்கு, கிறிஸ்தவ வாழ்வு தரும் பரிசும், பலனும் தேவனுக்குள்ளேயே இருக்கிறது. தேவனுடைய திட்டத்திற்கென்று வாழ்கின்றவனுக்கும்; உலகத்திற்குள்ளே உலகத்தின் ஞானத்தினாலும், உலகத்தின் உயர்வு, ஐசுவரியத்தினாலும் நிறைய வேண்டும் என்று வாழ்கிறவனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன தெரியுமா? உலகத்தினுள் வாழ்ந்தவன் மரித்தவுடன் வேதனையுள்ள, பரிதாபமான, இருள் நிறைந்த, துன்பம் அனுபவிக்கின்ற இடத்திற்கு போவான். தேவனுக்காக அவருடைய திட்டத்திற்கு கீழ்படிந்து, பூமியில் குறைச்சலுள்ளவனாய் வாழ்ந்தாலும், பூமியில் வாழும் பொழுதும் இருதயத்தில் சமாதானமும், தேவனுடைய வாக்குத் தத்தங்களின் மீது நம்பிக்கையும், மகிழ்ச்சியும் உள்ளவர்களாய் வாழந்து மரித்தபின் ஆறுதலடையும் ஆபிரகாமின் மடிக்கு செல்வார்கள். கிறிஸ்துவின் வருகையில் உயிரோடு எழுப்பப்படும் நம்பிக்கையும் அவனுக்கு உண்டு.

### V. முன்மாதிரியான வாழ்க்கை

கிறிஸ்தவனாக வாழ்கின்ற வாழ்க்கைக்கு ஏன் பரிசும், பலனும் கிடைக்கிறது? இவன் வாழ்ந்த வாழ்க்கையை அநேகர் பின்பற்றும் படியாக அவன் ஒரு மாதிரியை, ஒரு அடையாளத்தை, ஒரு அச்சடையாளத்தை அவனாலே விட்டுச் செல்ல முடியும். 'பொறுமையாயிருப்பது, மற்றவர்களால் நஷ்டத்தை சகிப்பது இவைகளை இந்த மனிதர்களிடம் மட்டுமே பார்க்க முடிந்தது' என்று உலகம் அடையாளப்படுத்துவதை காண, கேட்க முடியும். எப்படியென்றால், கிறிஸ்துவும் பட்ட பாடுகளினாலே கீழ்படிதலை கற்றுக் கொண்டார். அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றும் படியாக மாதிரியை விட்டுச் சென்றார் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது; அவரைப் போலவே கிறிஸ்துவை பின்பற்றுகிறவனும் அடிச்சுவடுகளை பின் வைத்துப் போகிறான்.



இந்த பூமியில் வாழும் வாழ்க்கை வெற்றியானதாக இருக்கும்படியல்ல. நிலையான வாழ்வை பெறுகிற அடிச்சுவடுகளை ஒரு கிறிஸ்தவனால் விட்டு செல்ல முடியும். ஒரு கிறிஸ்தவனாலே மட்டுமே வாழ்ந்து காட்ட முடியும்.

### VI. நித்தியத்திற்கான வாழ்க்கை

நித்திய வாழ்வு என்ற, இந்த கிறிஸ்தவன் போய் சேரக்கூடிய இடம் வித்தியாசமானதாயிருக்கிறது. அது எப்படிப்பட்ட இடம் என்று வெளி 21:4 கூறுகிறது. இது தான் கிறிஸ்தவ வாழ்வினுடைய நித்தியமாக, இறுதியாக, இளைப்பாறுகின்ற இடம். மெய்யான கிறஸ்தவனாய் வாழ்கிறவன், தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்பி, அந்த மகிழ்ச்சியிலே அவருடைய சமாதானத்தில் வாழுகிறவன் இளைப்பாறுதலைப் பெறுவான். மற்றவர்களுக்கோ துன்பமும், வேதனையும், கண்ணீரும், 24 மணி நேரமும் அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே பங்கும் கிடைக்கும். ஒரு மீட்கப்பட்ட கிறிஸ்தவன், கிறிஸ்தவனாய் வாழ்கிறவன், கிறிஸ்துவின் சித்தத்தின்படி வாழ்கிறவன் இந்த இளைப்பாறுதலைப் பெறுவான்.

ஆனபடியினாலே நாம் கிறிஸ்தவர்களாய் வாழ்வோம். கிறிஸ்துவர்களாய் வாழ்வதற்கு நம்மை அர்ப்பணிப்போம், கிறிஸ்தவர்களாய் வாழ்ந்து தேவ ஆசீர்வாதம் பெறுவோம்.

கிருபையுள்ள வார்த்தை T.V. நிகழ்ச்சிகள்
தமிழன் T.V.
ஞாயிற்றுக்கிழமை காலை 6–45 மணி
செவ்வாய்க்கிழமை இரவு 9–30 மணி

இப்பகுதியில் எங்களுடன் தொடர்பு கொள்ள :